செ.வெ.எண்: 374 நாள்: 04.05.2010

# பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசின், மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம் சார்பாக – 2010–2012 ம் ஆண்டில், 19 காதுகேளாத மாற்றுத் திறனாளிகளுக்கு தனிப்பிரிவு, அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் (ஆண்கள் மட்டும்) "பொருத்துநர்" (Fitter) பிரிவில் இரண்டு ஆண்டுகள் தொழிற் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி காது கேளாத மாற்றுத் திறனாளிகளுக்கான தனிப்பிரிவு, அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை – 600 032., என்ற நிறுவனத்தின் உதவியுடன் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகிறது. பயிற்சியாளர்களுக்கு பயிற்சி உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ 300/– அளிக்கப்படும். இந்த ஆண்டுக்கான இப்பயிற்சியில் சேர்த்து கொள்வதற்கான கல்வித் தகுதி 10 ஆம் வகுப்பு தேர்ச்சி, மற்றும் வயது வரம்பு 31.05.2010 அன்று 18 லிருந்து 25 வயது வரையுள்ள, காதுகேளாத மாற்றுத் திறனாளிகளாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம் மற்றும் அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான நல அலுவலகத்தில் பெற்று கொள்ளலாம் விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 31.05.2010 மாலை 5.45க்குள்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி .–**

**மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,**
**மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம்,**
**15/1, மாதிரிப் பள்ளிச் சாலை,**
**ஆயிரம்விளக்கு, சென்னை – 600 006.**

**ஓம்/– சா. விஜயராஜ் குமார்,**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,

வெளியீடு: இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.